உ

சிவமயம்



கோப்பாய் வடக்கு
சோனெழுவைச் சேர்ந்த

அமரர்

# வயிரமுத்து கந்தப்பிள்ளை

(ஓய்வு பெற்ற உதவி அரச அதிபர்)

அவர்களின்

# நினைவு மலர்

18.2.94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# வயிரமுத்து கந்தப்பிள்ளை

(ஓய்வு பெற்ற உதவி அரச அதிபர்)



பிறப்பு:
**12-7-1918**

இறப்பு:
**19-1-1994**

## திதி வெண்பா

### தை மாத பூர்வபக்க அட்டமி

ஸ்ரீமுக வாண்டு சேர்த்தை யாறாந்நாள்
பூர்வபக்க அட்டமித் திதிதன்னில் மிக்ககுணக்
கந்தப் பிள்ளைப் பெரியோன் கந்தன் கழலடியைச்
சொந்தமெனச் சேர்ந்திட்ட நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபரான அமரர் வயிரமுத்து கந்தப்பிள்ளை அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

ஐயா என்று பொதுமக்கள், நண்பர்கள், உறவினர்கள், பிள்ளைகள் யாவராலும் அன்புகனிய அழைக்கப்பட்ட கந்தப்பிள்ளை அவர்கள் 1918ம் ஆண்டு ஆடிமாதம் 12ம் திகதி வடகோவை தன்னில் வயிரமுத்து கதிராசிப்பிள்ளை தம்பதியினருக்கு இனிய கனிஸ்ட புத்திரராக வந்துதித்தார்.

இவருக்கு முன்னோராக திருமதி செல்லாச்சி வயிரமுத்து, இருமுத்தையா, திருமதி சின்னம்மா சின்னையா ஆகிய மூவரும் விளங்கினர்.

இவர் கனிஷ்ட இடைநிலைக் கல்வியை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் பின் தந்தையாரின் விருப்பத்திற்கிணங்க அவர் தமது உயர் கல்வியை யாழ் பரியோவான் கல்லூரியிலும் தொடர்ந்தார். இவர் 1936 இல் லண்டன் சர்வகலாசாலை பரீட்சையில் தேறினார். 1.9.37 இல் தபால் திணைக்களத்தில் அரசாங்க இலிகிதராக கொழும்பில் உத்தியோகம் பெற்றார். 1943இல் வவுனியா கச்சேரியில் காரியாதிகாரியாக (D. R. O) பதவி ஏற்றார். இளம் வயதிலேயே ஒரு உயர்பதவியை வகிக்கும் பேற்றினை பெற்றார்.

கோப்பாய்ப் பகுதியில் வாழ்ந்த காசிப்பிள்ளை காமாட்சி தம்பதிகளின் சிரேஸ்ட புலவ்வி முத்துப்பிள்ளை என்னும் நங்கை நல்லாளை இறையருள் வாழ்க்கைத் துணையாக வாய்க்க வைத்தது. இவ்வாழ்வை இனிதுற நடாத்திய கந்தப்பிள்ளை அவர்கள் சரஸ்வதி குகப்பிரசாதம் (இலங்கை மின்சார சபை), கோகிலாம்பிகை, நல்லைவரோதயன் (யாழ் மேல் நீதிமன்றம்), கௌரியாம்பாள் வேலாயுதமூர்த்தி (ப. நோ கூ. சங்கம் நீர்வேலி), கிருஸ்ணவேணி ஆகிய மக்கட் செல்வங்களுக்கு தந்தையாகும் பேற்றினைப் பெற்றார்.

இவரது 39 வருட சேவையில் கொழும்பில் 6 வருடங்கள் லிகிதராகவும், தொடர்ந்து 24 வருடங்கள் வவுனியா, ஒட்டிசுட்டான், மன்னார். மாந்தை, பூநகரி. தெல்லிப்பளை, மட்டக்களப்பு, பளை ஆகிய இடங்களில் D. R. O வாக தமது சேவையைத் திறம்பட நடாத்தினார். இவர் ஒரு சிறந்த சமய பக்தர். 1947 – 1952 ஆண்டுக் காலப் பகுதியில் மாந்தையில் D. R. O வாக இருந்தபோது திருக்கேதீஸ்வர புனருத்தாரண வேலைகளில் அதிகம் ஈடுபாடு காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1967இல் சொந்த இடமான கோப்பாய்க்கு உதவி அரசாங்க அதிபராக மாற்றம் பெற்றார். தனது சொந்த இடத்திலேயே தனது இறுதிச் சேவையை நல்கி 1976இல் ஓய்வு பெற்றார்.

திருவாளர்கள் நல்லதம்பி(R. M. P மன்னார்), இரவீந்திரன் (சித்திரமராயன் சேவிஸ் யாழ்ப்பாணம்), கார்த்திகேசு (மக்கள்வங்கி, பிரதான வீதி யாழ்ப்பாணம்). இன்பவதி குகப்பிரசாதம். கனேஸ்வரி நல்லைவரோதயன் (யாழ்/ அ. இ. க. நீர்வேலி) தவமலர் வேலாயுதமூர்த்தி என்பவர்களை மருமக்களாக்கி மகிழ்ந்தார்.

குமரசிறி, பிறேமச்செல்வி, நேசநந்தகு சிவாகர், ஹரிசன் கோபிகா ஹயாநந், கார்த்திகா, ஹரிசங்கர் கௌதமி ஆகிய சிறார்களை தம் பேரக்குழந்தைகளாகக் கண்டு மகிழ்ந்தார் இரண்டு வயது பேத்தியான கௌதமி உடனேயே அவரின் பெரும்பாலான பொழுது கழிந்தது. தனது அருமை மூத்தபேர்த்தியான செல்வி பிறேமச்செல்வி நல்லதம்பி வேம்படி மகளிர் கல்லூரியில் க. பொ. த உயர்தரப் பரீட்சையில் பொறியியல் துறைக்கு அதிக கூடிய புள்ளிகளைப் பெற்று புலமைபரிசில் மேற்படிப்புக்காக அவுஸ்ரேலியா சென்றபோது மனம் மிக மகிழ்ந்தார்.

தனது வாழ்க்கைக் காலத்தை பொதுச்சேவைக்காகவே அர்ப்பணித்த இவர் சில வருடங்களாக சுயமாகத் தனித்து நடமாட முடியாத நிலையில் இருந்தார். நடமாட முடியாத ஒரு குறையே தவிர இவர் மிகவும் தேக ஆரோக்கியமாக வேறு எவ்வித உடற்கோளாறும் இன்றி வீட்டிலே மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக காலத்தைக் கழித்தார்.

கதைத்து, சிரித்து, மகிழ்ந்து இருந்தவர் திடீரென தை மாதத்து 19ம் திகதி காலை 10 மணி தொடக்கம் இரவு 8 . 30 மணியாவும் வாய் பேசாத ஒரு மௌனியானார். காரணம் அறியாது மக்கள் துடித்தனர். நாட்டிற்கு பயன் கருதா நற்பணிகள் ஆற்றியவரை இறைவன் அமைதியான முறையில் தன்னுடன் அணைத்துக் கொண்டார்.

அவர் இறுதி மூச்சை நிறுத்திய நேரம் இரவு 8 . 30 மணி திதி பூர்வபட்ச அட்டமி ஆகும்.

அமரரின் புகழுடல் என்றும் அவரை அறிந்தவரிடையே நிலைத்து நிற்கும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வடகோவை
## ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி தேவஸ்தானம் வழங்கிய உரை

# "கையறு நிலையில் கவன்றிடு நெஞ்சம் கருதிய நினைவுகள்"

சைவத் திருவாளர் திரு. வ. கந்தப்பிள்ளை அவர்கள் வடகோவையில் உள்ள யாவராலும் நன்கு மதிக்கத்தக்க கண்ணியமான ஒரு குடும்பத்தில் பிறந்தவராவர். கண்டிப்பான சுபாவமுடைய தகப்பனார் மேற்பார்வையிலும் தக்க சூழ்நிலையில் அடக்கமான சுபாவமும் நல்லொழுக்கமும் உடையவராக இருந்தார். கல்விச் சாலைகளில் உயர் கல்வியை நன்கு கற்பதிலும், சமய நூல்களை படிப்பதிலும் இவர் அதிக விருப்பமுடையவராக இருந்தார். இவருடைய மாணவர் வாழ்க்கையை ஏனைய மாணவர்களும் பின்பற்றத்தக்க வகையில் சிறப்பாக அமைந்திருந்தது.

அரசாங்க லிகிதராக கொழும்பில் வேலை பார்த்தபோது அந்தந்த இடங்களில் இருந்த மக்களிற்கு தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து எல்லோரது இதயங்களிலும் தமக்கென ஓர் இடத்தைப் பிடித்தார். பிற்காலத்தில் தமது சொந்த ஊரான கோப்பாயில் உதவி அராசாங்க அதிபராக இருந்தபோது எமது பரம்பரைப் பரிபாலனத்தின் கீழ் உள்ள 'செல்வ விநாயகர்' புதிய கோவில் கட்டிடத்திற்கான 'அத்திவாரக்கல் நாட்டி' திருப்பணி வேலைகளை ஆரம்பித்து வைத்தார். இவர் நீண்ட காலமாக எனது நண்பராகவும் எமது ஊரில் உயர் பதவியிலும் இருந்தமையினால் வடகோவை மக்களினால் எனக்கு நடாத்திய பாராட்டு விழா வைபவத்தின் தலைவராக இருந்து இவ்விழாவையும், மலர் வெளியீட்டு வைபவத்தையும் சிறப்பாக நடாத்தி வைத்தார்.

இவர் மட்டக்களப்பில் உதவி அரசாங்க அதிபராக இருந்தபோது எனது மாமனார் பிரம்மஸ்ரீ க. இரத்தினசாமிக் குருக்களின் உற்றநண்பராக இருந்தார். மேலும் திருக்கேதீஸ்வர ஆலயத்தினதும் கொழும்பில் உள்ள பிரபல ஆலயங்களினதும்; குருமார்களின் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவராக இருந்தார். கோப்பாயில் நடைபெற்ற பொதுக்கூட்டங்கள், சமய நிகழ்ச்சிகள் பலவற்றிலும் பிரதான பங்கேற்றுச் சிறப்பாக நடாத்தி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகை அம்மன் ஆலயம், ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி ஆலயம், இன்னும் ஆலயங்கள் பலவற்றிலும் திருப்பணி சபைகளில் பங்குபற்றி அவர்களை உற்சாகமூட்டி செம்மையாக வழிநடாத்தினார்

இவ்வாறாக நல்லபல தொண்டுகளில் ஈடுபட்டிருந்த இப் பெருந்தகை சில காலம் நோய்வாய்ப்பட்டிருந்து ஜனவரி 19ம் நாள் சிவபதம் அடைந்து விட்டார். இப்பெரியாரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், உற்றார், உறவினர்கள், ஊரவர்கள் அனைவருக்கும் இறைவன் மனச்சாந்தியை அளிப்பாராக. இப்பெரியாரின் ஆன்மா திருக்கேதீஸ்வரநாதனின் திருவடிகளில் சேர்ந்து அமைதி பெற எல்லோரும் பிரார்த்திப்போமாக.

பண்டம்பேய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்ட அப்பெண்டிரும் மக்களும் பின்செல்வார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநடவாதே

ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கி பிணமென்று பெயரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே.

''சித்தாந்தபானு''
**சோ. சுப்பிரமணியக் குருக்கள்**
ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி தேவஸ்தானம்
கோப்பாய் வடக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுச் சேவை வித்தகர்

நேர்மைக்கும் கண்ணியத்துக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் திரு. வயிரமுத்து கந்தப்பிள்ளை அவர்கள். ஏறக்குறைய 39 ஆண்டுகள் அரச சேவையில் பணியாற்றியவர். கோப்பாய்ப் பிரிவு காரியாதிகாரியாக அவரிடமிருந்து பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டதிலிருந்து அவருக்கும், எனக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது.

அவர் பதவி வகித்த காலத்தில் கடமையின் நிமித்தம் பாரபட்சமில்லாத முறையில், எல்லோரையும் சமமாக நடத்துவதில் கவனமாகச் செயற்பட்டவர். நிர்வாகத் துறையில் பல்வேறு அரச அதிபர்களின் கீழ் கடமையாற்றி நிறைந்த அனுபவம் பெற்றவர்.

ஓய்வு பெற்றதன் பின்னரும், அவர் ஓய்ந்து இருக்கவில்லை. சமூகப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். பல தடவைகள், பல்வேறு விடயங்கள் தொடர்பில் என்னுடன் தொடர்பு கொண்டிருந்தார். அவையாவும் பொதுத் தேவையையொட்டியதான விடயங்களே தவிர அவரது தனிப்பட்ட விடயங்கள் அல்ல.

நிறைந்த வாழ்வு வாழ்ந்தவர் திரு. வ. கந்தப்பிள்ளை அவர்கள். அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

**க. ர. மாணிக்கவாசகர்**
அரச அதிபரும், மாவட்ட ஆணையாளரும்
யாழ் மாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோர்க்கும் இனியவர்

அமரர் வைரமுத்து கந்தப்பிள்ளையவர்கள் இலங்கை நிர்வாக சேவையில் சேர்ந்து யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உன்னதமாகச் சேவையாற்றி அனைவராலும் மிகவும் போற்றப்பட்டவர். அவரது எளிமையும் தற்பெருமையற்ற மற்றோர்க்கு உதவும் பரந்த மனப்பாங்கும் அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தது. தனது உடலைம் பாதிக்கப்படுவதைக்கூட பெரிதுபடுத்திக் கொள்ளாமல் மக்களுக்கு சேவை செய்வதையே தனது இலட்சியமாகக் கொண்டிருந்தார் அவரது வார்த்தைகள் பெருந்தன்மையை வெளிப்படுத்தின. பொதுச்சேவையில் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் இப்பெருந்தகை. தன்னுடன் கடமை புரிந்தவர்கட்கும் தந்தையைப் போல நல்ல அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் கூறி வழிகாட்டிய அவருடன் பழகும் வாய்ப்புப் பெற்றவர்கள் அதிஷ்டசாலிகளே. அவரது ஆத்மா சாந்தியடைவதாக.

ஆ. சிவசுவாமி
பிரதேசசெயலர்
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பழுக்கற்ற அரச அலுவலர்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வத்துள்ளுற்று உயர்ந்த. உத்தமர் உயர்திரு வயிரமுத்து கந்தப்பிள்ளை ஐயா அவர்கள் அப்பழுக்கற்ற அரச அலுவலராவர்; மறந்தும் பிறன் பொருள் கொள்ளாப் பெறற்கரும் பெற்றியர்; புனிதப் பொதுப் பணியைப் புனிதங் குன்றாமற் போற்றிய பொன்மனச் செம்மல்.

அன்றொரு நாள் தமது அலுவலொன்றைத் துரிதப்படுத்துவான் வேண்டிக் காரியாதிகாரி கந்தப்பிள்ளை அவர்களின் இல்லத்திற்கு நெறி பிறழ்ந்து செல்வாக்குத் தேடி விரைந்த பொதுமகனொருவர் விரட்டியோட்டப்பட்டமை இப்பெருமகனாரின் நேர்மைக்கான எண்ணிறந்த சான்றுகளுளொன்றாகும் அத்தூயவரின் தூய்மையையும், பொய்யாமையையும், நேர்மையையும் என்னென்பாம்! அந்நன்னெறி நவில்தோறும் நயத்தற்குரியது, ஏனையோர் ஏற்றிப் போற்றிப் பின்பற்றப்பாலது.

கேடில் விழுச் செல்வமான கல்வியை இடுக்கண்களுக்கு மத்தியில் இறுகப்பற்றி முன்னேறிய பெருந்தகையே கந்தப்பிள்ளை ஐயா அவர்கள்; கோப்பாயிலிருந்து சுண்டிக்குளியிலுள்ள பரியோவான் கல்லூரிக்குத் தினமும் கால்நடையாகவே சென்று, கல்வி பயின்று வாழ்வில் முன்னேறிக் கல்வியின் பெருமையை பறைசாற்றியுள்ளார் இப்பெரியார்.

நெடிந்துயர்ந்த உடலமைப்பு வாய்க்கப் பெற்றிருந்த கந்தப்பிள்ளை ஐயா அவர்கள், அதனிலும் விஞ்சி விரிந்துயர்ந்த உள்ளத்திற்குரியவராகியிருந்தார்கள். பழகுவதற்கு இனியவர், பண்பின் பெட்டகம், மனிதம் மிளிரும் மகோன்னதப் பிறவி.

இத்தகு பெருமைசேர் ஜீவாத்மா பரமாத்மாவுடனிணைந்திடேற இறையருளை இறைஞ்சியமைகின்றோம்.

சு. வ. கணேசன்
யாழ் / மேல் நீதிமன்றப் பதிவாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகோவை தந்த தவப்புதல்வன்

அமரர் கந்தப்பிள்ளை ஐயா அவர்கள் இக்கிராமத்தின் பூர்வீக பெற்றோர்களாகிய வயிரமுத்து தம்பதிகளின் புத்திரனாவார். சிறு வயதில் பெற்றோர்கள் இவரை நன்கு அரவணைத்து வளர்த்து தனது ஆரம்பக்கல்வியை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் (உயர் கல்வியை யாழ் பரியோவான் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.) மிகவும் வறுமையின் மத்தியிலும் ஆங்கிலத்தையும், தமிழையும் தெளிவுறக் கற்று கல்லூரியின் பெருமைக்கு இறமையுடன் லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சையில் சித்தியடைந்தார் இவர் மிகவும் குருபக்தி உடையவர்.

சிறுது காலம் செல்ல இலங்கை அரசசேவையில் சேர்ந்து சிறந்த நிர்வாகியாக D.R.O ஆக நியமனம் பெற்றார். சகலருடைய விருப்பத்தையும் வரவேற்று பற்றுடன் உறவினரான காசிப்பிள்ளை முத்துப்பிள்ளை அவர்களைத் திருமணம் செய்து நல்வாழ்வும் செய்பத் தொடங்கினார்.

அரசசேவையில் இலங்கைதீவின் பல பகுதிகளிலும் பெரும் புகழுடனும் சேவை செய்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் வாழ்ந்து குடும்பத்தில் ஏழு பிள்ளைகளையும் பெற்று முழுமையான குடும்ப வாழ்வு நடாத்தினார்.

எமது பகுதியில் இந்து மக்களால் போற்றி வணங்கப்படும் கண்ணகை அம்மனுக்கு ஒரு திருத்தேர் செய்யவும் பணியில் தன்னை மற்றவர்களுடன் இணைத்து இன்று திருவுலா வரும் திருத்தேருக்கு காரணகர்த்தாவாக இருந்தவராவார்.

கிராமத்தில் உள்ளவர்கள் ஆலோசனைகள் கேட்கும் போதெல்லாம் நல்லவற்றைச் சொல்லித்தருவார். நிதானமான பாதைகளை மக்களுக்குத் தெளிவு படுத்துவார்.

தனது அரசசேவையிலிருந்து ஓய்வு பெற்ற காலம் தொட்டு எமது கிராமத்தில் தனது சொந்த வீட்டில், தனது குடும்பத்துடன் அமைதியாக வாழ்ந்து இன்று எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார்.

இவரின் பிரிவினால் துயருறும் இவரின் அன்பு மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவருக்கும் ஆறுதல் கூறி கண்ணகை அம்மன் பரிபாலனசபையின் சார்பிலும் இக்கிராம மக்கள் சார்பிலும் எனது சார்பிலும் எங்கள் இதய பூர்வமான அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அவரது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இ. இராசரத்தினம்
தலைவர்
பரிபாலனசபை, பலாளை கண்ணகை
அம்மன் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கிராமத்துக்கு மெருகூட்டிய வயிரமுத்து கந்தப்பிள்ளை அவர்கள்

பெரும்பிரிவுகள் தோறும் 1926 இற்கு முன்னிருந்துவந்த மணியகாரன் உடையார் முறைமாறி காரியாதிகாரி, உதவி அரசாங்க அதிபர், பிரதேச செயலர் என்ற வகையில் பதவிப் பெயர்களும் செயற்பாடுகளும் மாற்றம் பெற்று வந்துள்ளதையும் வலிகிழக்குப் பிரிவில் வேலுப்பிள்ளை மணியகாரன் தொடக்கம் கேதீஸ்வரன் அரச செயலர் வரை பல பெரியார்கள் சேவையை இப்பகுதியில் பெற்றுள்ளதனையும்; இந்த வகையில் 1970 அளவில் திரு. வ. கந்தப்பிள்ளை அவர்கள் இப்பகுதியில் தொடர்ந்து 8 வருடமாகச் சேவையாற்றியதனையும் இவர் காரியாதிகாரி சேவையில் கடைசி ஆளாகவும், உதவி அரசாங்க அதிபர் சேவையில் முதலாவதாகவும் இடம் பெற்றார் என்பதனையும் அறிவேன்.

இக்காலப்பகுதியில் இப்பகுதியில் செயற்படுத்த வேண்டிய பொதுப் பணிகளில் ஈடுபட்டு மாகாண அதிபர் மாவட்ட அதிபர்களை ஊக்கியும், பாராளுமன்ற அங்கத்துவரையும், சமூகநல ஸ்தாபனங்களையும் இணைத்து மனுக்கள் சமர்ப்பித்துத் தொடர்ந்து முயற்சித்தும் உப்பாற்றுத் திட்டம், தோப்பு, பொக்கணை போன்ற குடியேற்றத் திட்டங்கள், கேப்பாய், அச்சுவேலி வைத்தியசாலைகள், இராச வீதி, உவர்நில மாதிரி நெற்செய்கை என்பவற்றிற்கு ஊக்கி நிறைவேற்றச் செய்தவர்கள் இடம் மாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வு பெற்ற வேளைகளில் பொது சனங்கள் திரண்டு அவர்கள் சேவை நலம் பாராட்டி விழா எடுத்ததனையும் அறிவோம். இந்த வகையில் வயிரமுத்து கந்தப்பிள்ளை அவர்கள் ஓய்வு பெற்றபோது அத்தியார் இந்துக் கல்லூரியில் நடந்த மாபெரும் பாராட்டு விழா என்றும் நினைவு கொள்ள வேண்டியதொன்றாகும்.

1945 இல் வ. கந்தப்பிள்ளை அவர்கள் ஒட்டிசுட்டான் காரியாதிகாரியாகச் சேவையாற்றிக் கொண்டிருந்த போது வன்னியரசர்களது கோட்டையாக விருந்த வர்வெட்டி மலையிடத்தைப் பார்ப்பதற்காக 25-1-45 மாலை முல்லைத்தீவு பஸ் வண்டியில் திரு. இராசசிங்கம் (உ. அ. அ.), A. C. செல்வராசா (ஆசிரியர்), க. செல்லத்துரை (கூட்டுறவுப் பரிசோதகர்), யான் நால்வரும் பிரயாணமாகி இரவு 2 மணியளவில் அவரிடம் சென்றோம். அறுவடைகாலமானபடியால் அச்சமயம் போடப்பட்ட தடைகளை மீறி கடத்தப்பட்ட நெல்மூடைகள் வாகனங்களுடன் இருப்பப்பட்டு விசாரணை நடைபெறுவதனையும் அவதானிக்க முடிந்தது மறுநாள் வர்வெட்டி மலை பார்க்கச் சென்ற போது அடர்ந்த காட்டுப் பிரதேசமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபடியால் முன்பின் இரண்டு துவக்குக்காரர்கள், வழிகாட்டிகள் காவுதடியில் மதிய போசனம், தண்ணீர் விடாய்க்கு நன்கு கனிந்த வாழைக்குலை சகிதம் சென்றோம். யானை, கரடிப் பயம் இடையில் முள்ளம் பன்றியிடம் இருந்து தப்பி மிகு சிரமத்தின் பேரில் வாவெட்டியை அடைந்தோம்.

மலையுச்சியில் நில அளவைப் பகுதியாரின் கொடி பறந்து கொண்டிருந்தது கோட்டை, கோயில் இடிபாடுகளையும். சுமார் 15X 3X 3 அடி அளவுள்ள ஒரே கல்லைவத்துக் கட்டப்பட்டு இருந்தனையும், குறித்த கல்லின் கீழ்ப் புதையில் இருக்கும் என்ற நோக்கில் "டைனமற்" வெடி வைத்தும் தகர்க்க முயற்சித்து முடியாமற் போன அடையாளங்களையும் கண்டோம். இலங்கையிலேயே மிகவும் பெரிய முல்லைத் தீவு தான்தோன்றியீஸ்வர ஆலய தெப்பக் குளத்தையும் தரிசித்தோம். அத்தியாரில் நடந்த வ. கந்தப்பிள்ளை சேவைநலம் பாராட்டு விழாவில் கூறிய இதுவிஷயத்தை மீண்டும் நினைவு கொள்கின்றோம்.

வ. கந்தப்பிள்ளை அவர்கள் சமூகப்பணி போலவே, சமயப் பணிகளிலும் ஈடுபாடு கொண்டுழைத்துள்ளார். 1800 வருடங்களுக்கு முற்பட்ட மிகவும் பழமைவாய்ந்த கண்ணகை அம்மன் கோயில் தேர்த் திருப்பணிச் சபைத்தலைவராயிருந்து பீடம் வரை தேர்வேலை முடிந்த போது உத்தியோக மாற்றம் பெற்றுச் செல்ல நேரிட்டதால் வெள்ளோட்ட விழாவும் நடாத்தினார்.

யாரோடும் நல்லவராகவும், வல்லவராகவும், தமிழ்ப் பிரதேசங்கள் பலவற்றிலும் சேவையாற்றி நமது கிராமத்திற்குப் பெருமை தேடித்தந்து மெருகூட்டிய வயிரமுத்து கந்தப்பிள்ளை அவர்களின் ஆன்ம சாந்திக்குப் பிரார்த்திப்போமாக.

க. இ. குமாரசாமி,
(சமாதான நீதவான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாக திறமை பெற்ற கந்தப்பிள்ளை ஐயா

1967 முற்பகுதியில் கோப்பாய்ப் பகுதிக்கு காரியாதிகாரியாக (D. R. O) கந்தப்பிள்ளை என்பவர் வருகின்றார் என அறிந்தேன். கோப்பாய் காரியாதிகாரி பிரிவில் ஓர் கிராமசேவையாளராக கடமை புரிந்த நான் அவர் குண இயல்புகள் பற்றி அறிய ஆவல் கொண்டு விசாரணை செய்து பார்த்தேன். அவரை நன்கு அறிந்தவர்கள் சொன்னார்கள் 'கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாக கொண்ட வயிரமுத்து கந்தப்பிள்ளை என்பவர் கோப்பாய்க்கு காரியாதிகாரியாக பதவி ஏற்க இருக்கிறார் எனவும் அவர் கடமையில் கண்டிப்பானவர் எனவும்'' கந்தப்பிள்ளை ஐயா அவர்கள் கோப்பாய் காரியாதிகாரியாக பதவி ஏற்கும் நாள் வந்தது. அவரை அன்று வரவேற்கவென கிராமசேவையாளர்கள், அலுவலக ஊழியர்கள் காத்து நின்றோம். காலை 9.00 மணியளவில் CL 6953 இலக்க A 40 கார் வந்து காரியாதிகாரி அலுவலக வளவுக்குள் பிரவேசித்தது அகனுள் இருந்து ஓர் ஆறு அடி உயரமான நபர் கீழே இறங்கினார். நெற்றியில் வீபூதிப் பூச்சு அதன் மேல் சந்தன குங்குமப் பொட்டுகள் வாய்நிறைய தாம்பூலம் சிரித்த முகம் வெள்ளை வெளேரென்ற கம்பீரமான உடுப்பு இவைதான் அவரின் அன்றைய காட்சி. இறங்கியவர் கூடி நின்றவர்களை சிரித்த முகத்துடன் அன்போடு வணங்கினார் கூடி நின்றவர்களும் அவரை வணங்கி அலுவலகத்தினுள் அழைத்து சென்றோம். உள்சென்று மகாநாட்டு மண்டபத்தில் அமர்ந்து கிராமசேவையாளர்கள், உத்தியோகத்தர்கள் அறிமுகம் செய்யப்பட்டனர். அங்கே அமரர் கந்தப்பிள்ளை ஐயா பேசும்பொழுது சிறிது கண்டிப்பு தன்மையை நான் உணர்ந்த போதிலும் அவருடைய கருணையையும். இனிமையையும் நன்கு கூடுதலாக உணர்ந்தேன். அன்று பதவி ஏற்ற காலம் தொட்டு இளைப்பாறும் வரை அமரர் கந்தப்பிள்ளை ஐயா அவர்கள் தன்கீழ் கடமை புரிந்த ஊழியர் எவரையும் சண்டித்து பேசியதை நான் கண்டதில்லை 1967ம் ஆண்டு தொடக்கம் 1977ம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுகளும் வலிகாமம் கிழக்கு பகுதி மக்களுக்கு ஓர் பொற்காலமாகும். துயர் உற்ற மக்களின் துயர் துடைப்பது தான் தன் பணி என சேவை செய்தவர். அமரர் கந்தப்பிள்ளை ஐயா அவர்கள் அன்பென்ற ஆயுதத்தாலேயே நிர்வாகத்தை செவ்வனவே நடாத்தியது என்றால் மிகையாகாது. அமரர் கந்தப்பிள்ளை ஐயா அவர்கள் இரண்டு மூக்கு கண்ணாடிகளை மாறி மாறி அணிவார். ஒன்று எழுத்து வாசிப்பதற்கு மற்றையது ஏன் என இன்று வரை தெரியாது அதை அவர் தன் கீழ் வேலை பார்க்கும் ஊழியர்களுக்கு அறிவுரை வழங்கும் பொழுது அணிவதைத்தான் நான் கண்டேன். அவர் அணிந்திருந்த கண்ணாடியை கழற்றி விட்டு மற்றையதை அணிந்தார் என்றால் எங்களுக்கு தெரியும் அவர் ஏதோ அறிவுரை வழங்கப்போகின்றார் என்று. அவர் அறிவுரைகளைக் கேட்டு ஒழுகிய எத்தனையோ ஊழியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பல உயர் பதவிகளில் இருக்கிறார்கள் என்றால் அந்தப் பெருமை அமரர் கந்தப்பிள்ளை ஐயா அவர்களையே சாரும்.

கந்தப்பிள்ளை ஐயா அவர்கள் தனக்கென வாழாது தன் உறவினர்களுக்காகவும், நண்பர்களுக்காகவும் வாழ்ந்தவர் என்றே சொல்லலாம். அவர் காரியாலயத்தில் இருக்கும் பொழுது அவர் உறவினர்களும், தெரிந்தவர்களும், நண்பர்களும் கூட அவரிடம் பணம் பெற்று சென்றதை நான் கண்டேன். அப்பொழுது அவர் சொல்லுவார் 'பாவம் என் கிட்டிய சொந்தக்காரன் கஸ்டப்பட்டு போனார் ஒரு உதவி செய்ய வேண்டும்'' என்று. அக்கொள்கையினாலே அவர் தனக்கோ தன் குடும்பத்துக்கோ சொத்து சொந்தைகளை சேர்க்கவில்லை மாறாக கடவுளின் கடாச்சத்தையே சேர்த்துக் கொண்டார் நோய் வாய்ப்பட்டிருந்த காலத்தில் கூட தான் சேவைசெய்த கால அனுபவங்களை அசைபோட்டு எங்களுடன் அவற்றை பேசி மகிழ்வார். அவர் இலங்கைத்தீவு முழுவதிலும் கடமையாற்றிய அனுபவங்களைக் கேட்டு அதிர்ந்து போய்விடுவோம். அவர் இன்று எம் மத்தியில் இல்லை இறைவன் அடியில் இருந்து எங்களைப் பார்க்கிறார். எங்கள் மத்தியில் இன்னும் பல்லாண்டு வாழ்ந்திருந்தால் இன்னும் பல்வேறு அறிவுரைகளையும் பெறும் வாய்ப்பு பெற்றிருப்போம். அவர் பிரிவால் துன்புறும் அவர் குடும்பத்தவர்களுக்கு என் ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவிப்பதோடு கந்தப்பிள்ளை ஐயாவின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென இறைவனை இறைஞ்சுகின்றேன்.

வே. சின்னத்துரை
கிராம அலுவலர்.
ஊரெழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருபால் கோடாத சான்றோன்

வையத்தில் வாழ்வாங்கு வாழவேண்டிய நெறி பிறழாத வாழ்க்கைமுறை, கௌரவத்தை விட்டுக் கொடுக்காத, எவர்பின்னும் செல்லாத தன்மான உணர்வு, சைவம், தமிழ், தமிழர் கலைபண்பாடு, மண் மீட்பு எனும் நாட்டுப்பற்று, எளிமையோடு கூடிய இயற்கையான கம்பீரத் தோற்றம், காலந்தவறாத கடமை உணர்வு, இன்னா செய்தார்க்கும் இனியன செய்யும் செந்தண்மை, எந்நேரமும் வெற்றிலை குதப்பலினால் சிவந்தொளிரும் கொவ்வைச் செவ்வாய், இதந்தரும் மனித நேயம் கொண்ட சிறந்த நிர்வாகிக்கு இயல்பாக அமைய வேண்டிய சாதுமிரண்டால் காடுகொள்ளாத ஆண்மை ஆகிய இன்னபிறவற்றின் அகப்புறத் தோற்றமாக திகழ்ந்தவரே அமரர் திரு. வயிரமுத்து கந்தப்பிள்ளை அவர்கள்.

சாதாரண எழுதுவினைஞராகத் தமது தொழில் நிலையை ஆரம்பித்த அமரர் அவர்கள் தமது நுண்மான் நுழைபுலத்தினாலும், திறமையினாலும் வினைத்திட்பத்தினாலும் காரியாதிகாரியாக பதவி உயர்ந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல்வேறு பகுதிகளில் கடமையாற்றிவிட்டு 1967ம் ஆண்டு நடுப்பகுதியில் மண்ணின் மைந்தன் என்ற உரிமைசார் பெருமையோடு வலிகாமம் கிழக்கு பிரிவு காரியாதிகாரியாகப் பொறுப்பேற்று அதன் முதலாவது உதவி அரசாங்க அதிபராகவும் சிலகாலம் சேவையாற்றிய பின் 1976ம் ஆண்டு நடுப்பகுதியில் அரசாங்க சேவையினின்றும் ஓய்வு பெற்றுக்கொண்டார்.

இலங்கையில் கிராமத் தலைமைக்காரர் முறை ஒழிக்கப்பட்டு கிராம சேவையாளர் முறை தளர்நடை போட்ட மழலைப்பருவத்தில் இப்பகுதி காரியாதிகாரியாகப் பதவி ஏற்று வந்தார். தன் சுற்றத்தாரின் துன்பத்தைப்போக்கித் தாங்குகின்ற தூண்போல் அமைந்து, தலைசிறந்த தலைமைத்துவத்தையும் அதுசார்ந்த வழிகாட்டலையும் இறுதிவரை பேணிக்காத்து வளர்ந்து நின்றதோடமையாது, தன் இன்பத்தை விரும்பாதவராக மேற்கொண்ட செயலை முடித்துக்காட்டிய கர்ம வீரராகவும் திகழ்ந்தார். அவர் வழிகாட்டல் இன்றும் எம்மை வழிநடத்திச் செல்வதை நன்றியுடன் நினைவு கூர வேண்டியுள்ளது.

வலிகாமம் கிழக்கு பிரிவு காரியாதியாகப் பொறுப்பேற்ற சில நாட்களில் 24 . 06 . 1967 ல் பத்தமேனியில் புதிதாக அமைக்கப்பட்ட நெசவுநிலையத்தைத் திறந்து வைத்தார். அன்னார் இப்பகுதியில் கலந்து கொண்ட முதலாவது பொது நிகழ்வு இதுவாகும். அப்பகுதிக் கிராமசேவையாளராக அப்பொழுது அங்கிருந்தேன். ஆறடி உயரமான அப்பெருமனிதரை ஏறஇறங்கப் பார்க்கும் வாய்ப்பு அன்று கிடைத்தது. அவருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பு இறுதி வரை இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந்தது. அவரது சேவைக்கால இறுதி வரை வலிகாமம் கிழக்கு பகுதி யின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை வடிவமைத்து செயலுரு வம் கொடுத்த பெருமை அன்னாரைச் சார்ந்ததாகும்; விரிக்கில் பெரு கும் என்றஞ்சி விடுத்தோம் எனக்கொள்க

தமது அரசசேவைக் காலத்தில் தமது பிள்ளைகள், உறவினர், நண்பர், சுற்றத்தார் என்று பேதம் காட்டாது சகல மக்களையும் நடுவுநிலமை பிறழாது அரவணைத்து கொண்டவர் அமரர் அவர்கள்

" சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி "

என்னும் வள்ளுவத்திற்கு இலக்கணமாக உள்ளும் புறமும் வாழ்ந்து காட்டிய தமிழ்ச் சான்றோன் அமரர் திரு. கந்தப்பிள்ளை அவர்கள்

கெளரவப்பட்டங்களையோ, சொத்துசுகங்களையோ உயர் அதி காரி என்ற வகையில் வீட்டுக்கு எடுத்துச் செல்லாது, உடல்நலக் குறை வோடும் இறுதி வரை செம்மையாக வாழ்ந்து காட்டிய சீர்மையே அவர் விட்டுச்சென்ற பெருஞ் சொத்தாகும்.

" கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு "

எனும் பொதுமறை அமரரின் வாழ்வுக்கு ஒளி சேர்ப்பதாகும்.

அன்னாரின் பேரிழப்பினால் துயருற்றிருக்கும் அவரது இல்லத்தர சியார், அவர் புத்திரி, புதல்வர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள் ளுகிறோம்.

திரு. அ. க. த. கிருஷ்ணராசா
கிராம அலுவலர்,
உரும்பிராய் தெற்கு

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணப் பாடல்கள்

## ஞாயிற்றுக்கிழமை

### 1. தேவாரம்

பண்-சீகாமரம்] திருச்சிற்றம்பலம் [2 ஆம் திருமுறை

பேய் அடையா பிரிவு எய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவு
ஆயினவே வரம் பெறுவர், ஐயுற வேண்டா ஒன்றும்;
வேய் அனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய் வினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீவினையே

### 2. திருவாசகம்

[8 ஆம் திருமுறை

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ, பாவியேனுடைய
ஊனினை உருக்கி, உள் ஒளி பெருக்கி,
உலப்பு இலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே! சிவபெருமானே!
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே!

### 3. திருவிசைப்பா

பண்-காந்தாரம்] [9 ஆம் திருமுறை

நையாத மனத்தினனை நைவிப்பான் இத் தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்று முதல் இன்று வரை
கையாரத் தொழுது, அருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்? கோடைத் திரைலோக்கிய சுந்தரனே!

### 4. திருப்பல்லாண்டு

பண்-பஞ்சமம்] [9 ஆம் திருமுறை

மிண்டு மனத்தவர் போமின்கள்;
மெய் அடியார்கள் விரைந்து வம்மின்;
கொண்டும் கொடுத்தும் குடிகுடி
ஈசற்கு ஆட்செய்மின்; குழாம் புகுந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்டம் கடந்த பொருள், அளவு
இல்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள்,
பண்டும் இன்றும் என்றும் உள்ள
பொருள்" என்றே பல்லாண்டு கூறுதுமே!

## 5. பெரிய புராணம்

[12 ஆம் திருமுறை

ஆதியாய் நடுவும் ஆகி அளவு இலா அளவும் ஆகி,
சோதியாய் உணர்வும் ஆகி, தோன்றிய பொருளும் ஆகி,
பேதியா வேகம் ஆகி, பெண்ணுமாய் ஆணும் ஆகி,
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி!

திருச்சிற்றம்பலம்

★

# திங்கட்கிழமை

## 1. தேவாரம்

பண்-கொல்லி] திருச்சிற்றம்பலம் [3 ஆம் திருமுறை

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்; வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவு இலை;
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே!

## 2. திருவாசகம்

[8 ஆம் திருமுறை

நானேயோ தவம் செய்தேன்? சிவாய நம எனப்பெற்றேன்!
தேனாய் இன் அமுதமுமாய் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம்புகுந்து, அடியேற்கு அருள் செய்தான்
ஊன் ஆரும் உயிர் வாழ்க்கை ஒறுத்து அன்றே வெறுத்திடவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. திருவிசைப்பா

பண்-சாளரபாணி] [9 ஆம் திருமுறை

எம் பந்த வல்வினை நோய் தீர்த்திட்டு, எமை ஆளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையும் ஆட்கொண்டு அருளி
அப்பு உந்து கண்ணாளும் தானும் அணி தில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே!

## 4. திருப்பல்லாண்டு

பண்-பஞ்சமம்] [9 ஆம் திருமுறை

சொல் ஆண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூ மனத் தொண்டர் உள்ளீர்!
சில் ஆண்டில் சிதையும் சில
தேவர் சிறு நெறி சேராமே,
வில் ஆண்ட கனகத் திரள்
மேரு விடங்கன் விடைப் பாகன்
பல்லாண்டு என்னும் பதம் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!

## 5. பெரிய புராணம்

[12 ஆம் திருமுறை

தூய வெண் நீறு துதைந்த பொன் மேனியும், தாழ்வடமும்,
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும், நைந்து உருகிப்
பாய்வதுபோல் அன்பு நீர் பொழி கண்ணும், பதிகச் செஞ்சொல்
மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதி உள்ளே!

திருச்சிற்றம்பலம்

★

# செவ்வாய்க்கிழமை

## 1. தேவாரம்

திருவிருத்தம்] திருச்சிற்றம்பலம் [4 ஆம் திருமுறை

ஈன்றாளுமாய், எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்து உகந்தான் மனத்துள் இருக்க
ஏன்றான்; இமையவர்க்கு அன்பன் திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன் அடியோங்களுக்கே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. திருவாசகம்

[8 ஆம் திருமுறை

காலம் உண்டாகவே காதல் செய்து உய்மின்; கருதரிய
ஞாலம் உண்டானொடு நான்முகன் வானவர் நண் அரிய
ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப்பிரான் தன் அடியவர்க்கு
மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே!

## 3. திருவிசைப்பா

பண்-சாளரபாணி] [9 ஆம் திருமுறை

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதம் மாறா வெள்ஆனை மேல் கொள்ள
முளையாமதி சூடி மூ ஆயிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம் நின் ஆடு அரங்கே!

## 4. திருப்பல்லாண்டு

பண்-பஞ்சமம்] [9 ஆம் திருமுறை

சீரும் திருவும் பொலிய
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்;
பெற்றது ஆர் பெறுவார் உலகில்?
ஊரும் உலகும் கழற
உழறி உமைமணவாளனுக்கு ஆள்
பாரும் விசும்பும் அறியும்
பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே!

## 5. பெரிய புராணம்

[12 ஆம் திருமுறை

ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில், தனிப்பெருங் கூத்தின்
வந்த பேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறு இலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன்கிழமை

## 1. தேவாரம்

திருத்தாண்டகம்] திருச்சிற்றம்பலம் [6 ஆம் திருமுறை

திருநாமம் அஞ்சு எழுத்தும் செப்பார் ஆகில்,
தீ வண்ணர் திறம் ஒருகால் பேசார் ஆகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழார் ஆகில்
உண்பதன்முன் மலர் பறித்திட்டு உண்ணார் ஆகில்,
அருநோய்கள் கெட வெண் நீறு அணியார் ஆகில்,
அளி அற்றார்; பிறந்தவாறு ஏதோ என்னில்,
பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்தும் செத்துப்
பிறப்பதற்கே தொழில் ஆகி இறக்கின்றாரே!

## 2. திருவாசகம்

[8 ஆம் திருமுறை

வேண்டத் தக்கது அறிவோய் நீ!
வேண்ட முழுதும் தருவோய் நீ!
வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ!
வேண்டி என்னைப் பணி கொண்டாய்!
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உன்றன் விருப்பு அன்றே!

## 3. திருவிசைப்பா

பண்-பஞ்சமம்] [9 ஆம் திருமுறை

ஏக நாயகனை இமயவர்க்கு அரசை,
என் உயிர்க்கு அமுதினை, எதிர் இல்
போக நாயகனை, புயல்வணற்கு அருளிப்
பொன் நெடும் சிவிகையா ஊர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழி
மிழலை விண் இழி செழும் கோயில்
யோக நாயகனை அன்றி, மற்று ஒன்றும்
உண்டு என உணர்கிலேன் யானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. திருப்பல்லாண்டு

பண் - பஞ்சமம்) (9 ஆம் திருமுறை

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்;
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன்; மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடம் ஆக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே !

## 5. பெரிய புராணம்

(12 ஆம் திருமுறை

சிவன் அடியே சிந்திக்கும் திருப் பெருக சிவஞானம்;
பவம் அதனை அற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்;
உவமை இலாக் கலைஞானம்; உணர்வு அரிய மெய்ஞ்ஞானம்;
தவ முதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்.

திருச்சிற்றம்பலம்

# வியாழக்கிழமை

## 1. தேவாரம்

பண் - கொல்லி திருச்சிற்றம்பலம் (7 ஆம் திருமுறை

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்கினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!
இம்மையே தரும் சோறும் கூறையும்;
ஏத்தலாம் இடர் கெடலுமாம்;
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே !

## 2. திருவாசகம்

(8 ஆம் திருமுறை

அன்றே எந்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ ?
இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்தோள் முக்கண் எம்மானே !
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே !
நானோ இதற்கு நாயகமே !

## 3. திருவிசைப்பா

பண் - பஞ்சமம் (9 ஆம் திருமுறை

தந்தை அங்கணையார் தங்கள் மேல் வைத்த
தயாவை நூறு ஆயிரம் கூறிட்டு
அத்தில் அங்கு ஒரு கூறு உன்கண் வைத்தவருக்கு
அமர் உலகு அளிக்கும் நின் பெருமை !
'பித்தன்' என்று ஒருகால் பேசுவரேனும்
பிழைத்தவை பொறுத்து அருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னி வைத்த கங்கை
கொண்ட சோளேச்சரத்தானே !

## 4. திருப்பல்லாண்டு

பண் - பஞ்சமம் ) (9 ஆம் திருமுறை

தாதையைத் தாள் அற வீசிய
சண்டிக்கு, அவ் அண்டத்தொடும் உடனே
பூதலத்தோரும் வணங்கப் பொன்
கோயிலும் போனகமும் அருளி
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே !

## 5. பெரிய புராணம்

(12 ஆம் திருமுறை

ஞானத்தின் திரு உருவை, நான்மறையின்
தனித்துணையை
வானத்தின் மிசை அன்றி மண்ணில் வளர்
மதிக் கொழுந்தை
தேன் நக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார்
சீர் தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண் களிப்பக்
கண்டார்கள்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிக்கிழமை

## 1. தேவாரம்

பண் - தக்கேசி திருச்சிற்றம்பலம் (7 ஆம் திருமுறை

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை
போகமும் திருவும் புணர்ப்பானை
பின்னை என் பிழையைப் பொறுப்பானை
பிழை எலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்று அறிவொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயல் பழனத்து அணி
ஆரூரானை மறக்கலும் ஆமே!

## 2. திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து (8 ஆம் திருமுறை
உன் விரை ஆர் கழற்கு என்
கைதான் தலை வைத்து, கண்ணீர்
ததும்பி, வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து, உன்னைப் போற்றி
சய சய போற்றி என்னும்
கை தான் நெகிழ விடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே!

## 3. திருவிசைப்பா

பண் - இந்தளம் ) ( 9 ஆம் திருமுறை

அன்ன நடையார், அமுத மொழியார்
அவர்கள் பயில் தில்லைத்
தென்னன் தமிழும் இசையும் கலந்த
சிற்றம்பலம் தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த தலத்துப்
புலித்தோல் பியற்கு இட்டு
மின்னின் இடையாள் உமையாள் காண
விகிர்தன் ஆடுமே!

## 4. திருப்பல்லாண்டு

பண் - பஞ்சமம் ) (9 ஆம் திருமுறை

குழல் ஒலி, யாழ் ஒலி, கூத்து ஒலி, ஏத்து ஒலி
எங்கும் குழாம் பெருகி
விழவு ஒலி விண் அளவும் சென்று விம்மி
மிகு திரு ஆரூரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழவிடையாற்கு வழி வழி ஆளாய்
மணம் செய் குடிப் பிறந்த
பழ அடியாரொடும் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!

## 5. பெரிய புராணம் (12 ஆம் திருமுறை

மண்ணினில் பிறந்தார் பெறும் பயன், மதி சூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல்;
உண்மையாம் எனின் உலகர் முன் வருக" என உரைப்பார்.
திருச்சிற்றம்பலம்

# சனிக்கிழமை

## 1. தேவாரம்

திருவிருத்தம்) திருச்சிற்றம்பலம் (4 ஆம் திருமுறை

கரு உற்ற நாள்முதலாக உன் பாதமே காண்பதற்கு
உருகிற்று என் உள்ளமும் நானும் கிடந்து அலந்து
(எய்த்தொழிந்தேன்
திரு ஒற்றியூரா! திரு ஆலவாயா! திரு ஆரூரா
ஒரு பற்று இளமையும் கண்டு இரங்காய், கச்சி ஏகம்பனே!

## 2. திருவாசகம்

8 ஆம் திருமுறை

இன்று எனக்கு அருளி இருள் கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பு அறநினைந்தேன்
நீ அலால் பிறிது மற்று இன்மை;
சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்
திருப்பெருந்துறை உறை சிவனே!
ஒன்றும் நீ அல்லை; அன்றி ஒன்று இல்லை;
யார் உன்னை அறிய கிற்பாரே!

## 3. திருவிசைப்பா

பண்-பஞ்சமம்) (9 ஆம் திருமுறை

முத்தியாளர் நான் மறையர் மூஆயிரவர் நின்னோடு
ஒத்தே வாழும் தன்மையாளர் ஓதிய நான்மறையைத்
'தெத்தே' என்று வண்டு பாடும் தென் தில்லை அம்பலத்துள்
அத்தா, உன்தன் ஆடல் காண அணைவதும் என்றுகொலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. திருப்பல்லாண்டு

பண்- பஞ்சமம் ) ( 9 ஆம் திருமுறை

நிட்டை இலா உடல் நீத்து என்னை ஆண்ட
நிகர் இலா வண்ணங்களும்
சிட்டன் சிவன் அடியாரைச் சீராட்டும்
திறங்களுமே சிந்தித்து,
அட்ட மூர்த்திக்கு, என் அகம் நெக ஊறும்
அமிர்தினுக்கு, ஆல நிழற்
பட்டனுக்கு என்னைத் தன்பால் படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!

## 5. பெரிய புராணம்

( 12 ஆம் திருமுறை

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்
வேண்டுகின்றார்
'பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்பு உண்டேல்,
உன்னை என்றும்
மறவாமை வேண்டும்: இன்னும் வேண்டும், நான்
மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போது, உன் அடியின் கீழ்
இருக்க' என்றார்.

திருச்சிற்றம்பலம்

## உருத்திராக்க மகிமை

திருத்தாண்டகம்) திருச்சிற்றம்பலம் (6ஆம் திருமுறை

எவரேனும் தாமாக இலாடத் திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்ட போதே
உகந்தடிமைத் திறம் நினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

மறைந்த எமது இல்லத் தலைவர்

**வ. கந்தப்பிள்ளை அவர்களது**

மரணச் சடங்கில் கலந்துகொண்ட
உற்றார், உறவினர், நண்பர்களுக்கும்
அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும்
இரங்கல் உரை வளங்கியவர்களுக்கும்,
மலர் வளையங்கள் வைத்தவர்களுக்கும்,
பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்த
அன்பர்களுக்கும்,
இம்மலரை அச்சிட்டு விரைவாக வெளியிட
உதவிய அச்சகத்தாருக்கும்
எங்கள் நன்றியைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

மனைவி, மக்கள் மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

சோலெழு
கோப்பாய் வடக்கு
கோப்பாய்

ஸ்ரீ விக்னேஸ்வரா அச்சகம் 150, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org